DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | சிவலிங்கம் | Village | மிண்டாப்பட்டு |
| Father's Name | கனப்ப கவுண்டர் | Taluk | வாணியம்பாடி |
| Age | 62 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **26.03.2026**

**O.S. No. 58/2017** **வா.சா.2** **01.07 PM – 01.22 PM**

**குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கில் ஏற்கனவே தள்ளுபடி செய்யபட்ட இ.ம. எண். 300/2018 – லிலும் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். வாதி சம்மந்தப்பட்ட ஏற்கனவே அ.வ.எண்.55/2018 பற்றி எனக்கு தெரியுமா என்றால எனக்கு தெரியாது. நான் இருக்கும் ஊராட்சி வேறு என்றாலும் வழக்கு சொத்து மற்றும் வாதி பிரதிவாதிகள் இருக்கும் ஊராட்சி வேறு என்றாலும் சரிதான்.

2. நான் சம்பந்தப்பட்ட எத்தனை வழக்குகள் இந்த நீதிமன்றத்தில் நடைபெற்று முடிந்தது என்று சொன்னால் ஒரு வழக்கு தான். என்னுடைய வழக்கு மற்றும் இந்த வழக்கு அல்லாமல் வேறு எத்தனை வழக்குகளை சாட்சியாக வந்துள்ளேன் என்று சொன்னால் வேறு எந்த வழத்திற்கு சாட்சியாக வந்ததில்லை, சாட்சி மேலும் சரியாக ஞாபகம் இல்லை எனவும் கூறுகிறார்.

3. ஏற்கனவே நான் வேறு 3 வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என ஏற்கனவே நான் ஒரு வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம் என்னுடைய சொந்த வழக்கு ஆகும். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள 1975 , 1997 மற்றும் 2012 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் நான் ஏதேனும் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. மேற்படி நான் குறிப்பிட்ட மூன்று ஆவணங்களின் அசல் ஆவணத்தை நான் பார்த்தேன் என்றால் பார்த்துள்ளேன். எப்போது எங்கு வைத்து பார்த்தேன் என்று சொன்னால் வாதியின் வீட்டில் வைத்து பார்த்ததேன், காவல் நிலையத்தில் வைத்து ஒரு தடவை காண்பிக்கப்பட்டது 2017 ஆம் வருடம் இருக்கும்.

4. மேற்படி நான் 2017 ஆம் வருடம் பார்த்த ஆவணத்தை பொறுத்துதான் தற்போது 2026 ஆம் வருடம் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். யார் யாருக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தியாகுவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்து குறித்து மட்டும் தான் தெரியும் மற்றவர்கள் குறித்து எனக்கு தெரியாது. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் பத்துக்கும் மேற்பட்ட புளிய மரங்கள் இருந்தது என நான் கூறியிருக்கிறேன் அவ்வாறு மேற்படி மூன்று ஆவணங்களில் குறிப்பு உள்ளது என்று சொன்னால் சாட்சியதற்கு தியாகு சொத்தில் உள்ளது நான் நேரடியாக சென்று பார்த்தேன் என பதில் கூறுகிறார். ஆவணங்களில் குறிப்பிடாத புளிய மரங்கள் குறித்து நான் இருப்பதாக தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் புளிய மரங்கள் பின்னிட்டு வைக்கப்பட்டது.

5. வைக்கப்பட்டுள்ள புளிய மரங்களின் வயது தெரியுமா என்றால் சாட்சி நேரடியாக பதில் கூறாமல் வைத்துள்ளார்கள் நான் பார்த்தேன் எனக் கூறுகிறார்.

***(சாட்சி குறுக்கு விசாரணையின் போது சரிவர பதில் கூறாமல் நடந்து கொள்கிறார் குறுக்கு விசாரணை தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது. குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாணியம்பாடி.